# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

எமது பங்குச்சபையின் முதற் கூட்டமானது 21-02-2009 சனிக்கிழமை மாலை 7மணிக்கு எமது பங்குத்தந்தை அருட்திரு அன்று தவராஜசிங்கம் தலைமையில் எமது ஆலய சிறிய மண்டபத்தில் பங்குத்தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய கூட்டத்தில்,

1.திருமண பீட ஆயத்தம் சார்பில்: திரு. மோசஸ் சூசைமாணிக்கம்

2.வழிபாடு ஆயத்தம் சார்பில்: திரு, அலெக்ஸ் மார்க்கண்டு

3.மறைக்கல்வி சார்பில்: திரு. அம்புறோஸ் தாவீது

4.பாடகர் குழாம் சார்பில்: திரு. தேவதாஸ் விசுவாசமுத்து

5.பீட அலங்காரம்: சார்பில்: திரு. நெல்சன் ஆரோக்கியநாதன்

6.சமூக நலப்பணி சார்பில்: கலிஸ்ரா தவராஜா

7.புது வாழ்வு சபை சார்பில்: திரு.யூலியன் ஜெயரட்ணம்

8.மரியாயின் சேனை சார்பில்: திரு. அல்பிரட் ஞானராஜா

9.இளைஞர் சார்பில்: செல்வன் சார்ள்ஸ் அமிர்தநாதர்

10.பொது நிலையினர் சார்பில்: திரு. றொபின் யேசுதாசன், திரு. ஜஸ்ரின்ஜீவானந்தம்

11.புதிய உறுப்பினர் வரவேற்பாளர் சார்பில்: திரு. அமிர்தநாதர் பாக்கியநாதர்

12.நிர்வாகசபை சார்பில்: திரு. விஜயக்குமார் அகஸ்ரின்,

13.எமது பங்குப் பணியக செயலாளர்: அருட் சகோதரி. கார்மெல் ஜோண்பிள்ளை அவர்களுடன், பங்குச்சபையின் 15 உறுப்பினர்களும், சமுகம் தந்திருந்தனர்.

அதன் பிற்பாடு எமது பங்குச் சபைக்கு ஒரு செயலாளர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று பங்குத் தந்தை கூறினார். அதற்கு அமைவாக செயலாளராக இருப்பவர் கோவில் சம்பந்தமான சகல விடயங்களையும் அறிந்தவராகவும் இருக்கவேண்டும் என்று திரு. யூலியன் ஜெயரட்ணம் அவர்கள் கூறினார். பின் எமது பங்குச் சபையின் புதிய செயலாளராக திரு. நெல்சன் ஆரோக்கியநாதனை, திரு. அலெக்ஸ் மார்க்கண்டு அவர்கள் முன்மொழிய, திரு. ஜஸ்ரின் ஜீவானந்தம் அவர்கள் வழிமொழிந்தார். செயலாளருக்குரிய பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பின்னர் பங்குத்தந்தை அவர்கள் “ஆயர் இல்லத்தில் எப்படி ஒரு கட்டுக்கோப்பு இயங்குகின்றதோ, அதேபோல ஒரு பங்குச்சபையும் அமைந்து இருக்க வேண்டும்.” என்பதைப்பற்றி விளக்கம் அளித்தார். அதன் அடிப்படையில் ஆலயநிர்வாகசபையானது - பங்கின் நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் என்றும், ஏனைய பங்குப் பராமரிப்பு, ஆன்மீகப் பணிக்குப் பங்குச்சபை பொறுப்பாக இருக்கும். என்றும் தெளிவு படுத்தினார்

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 21-02-2009

எமது பங்குச் சபையானது, பங்குத்தந்தையின் தலைமையில் 11 வாக்குரிமையுடைய உறுப்பினர்களாகவும், பங்குப்பணியின் நிமித்தம் பங்குபெறும் உறுப்பினர்களாக 3 பேரும் சேர்ந்து அமைந்ததே பங்குச்சபையாகும். எமது பங்குச்சபையின் உறுப்பினர்களாக இருப்பவர்கள் எமது பங்கில் குறைந்தது 2 வருடங்களாவது பங்கு சார்ந்து, பங்கில் பதியப்பட்ட உறுப்பினராக இருக்கவேண்டும். அதைவிட 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், திருச்சபையின் சட்டதிற்கு உட்பட்டவராகவும், துன்மாதிரிகையான போக்கு அற்றவராகவும், பொறுமை, மன்னிப்பு, சாந்தம் போன்ற நற்பண்புகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும், என்று பங்குத் தந்தை கூறினார். மேலும், நாம் தமிழ்க் கத்தோலிக்க மறைத்தளத்தைச் சேர்ந்தபடியினால் இந்தப் பகுதியைச் சேர்ந்த தமிழ்க் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இந்தப் பங்கில் சேர்ந்து கொள்ளலாம் என்பதைப்பற்றியும் கூறினார்.

அடுத்து பங்குச்சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், எந்தெந்தப் பொறுப்பைச் சார்ந்தவர்கள் என்பதைப் பற்றியும் கூறினார். மேலும், வழிபாடு பற்றிக் கூறுகையில் “வழிபாடானது வெறுமனே ஒரு வழிபாடாக இல்லாமல் அது எமது ஆன்மீகத்துடன் ஒன்றிணைந்ததாகவும் இருக்க வேண்டும்” என்றும் வலியுறுத்திக் கூறினார். மேலும், எமது பங்கில் இனிவரும் காலங்களில் சமூகநலப் பணிகள் பங்குச்சபை ஊடாக செயல்படுத்தலாம் என்றும், பங்குச்சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் கூறினார். மேலும், அனைத்து வழிபாடுகளும் திறம்படச் செயற்பட்டு வருகின்றன என்றும், அவை மேலும் தொடர்ச்சியாக செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். காரணம் எமது பங்கில் பல பங்குத் தந்தைகள் சேவைசெய்யலாம், ஆனால் பங்குமக்களாகிய நாம், எமது பங்கினை தொடர்ச்சியாக வழிநடத்திச் செல்ல கடமைப்பட்டு இருக்கின்றோம் என்றும் கூறினார்.

எமது பங்குச்சபை உறுப்பினர்களின் சேவைக்காலம் பற்றிக் கலந்துரை யாடப்பட்டதில், பங்குமக்கள் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதாலும் ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களுடைய பணியினை 2 வருடகாலத்துக்கு மட்டுமே செய்யலாம் என்று முடிவுசெய்யப்பட்டது. ஆனால் திருமண ஆயத்தம், கல்வி சம்பந்தமான ஆயத்தத்துக்கும் பொறுப்பானவர்கள், அதற்குப் பொருத்தமானவர்கள் நியமிக்கப்படும்வரை அதனை தொடர்ந்து செய்வார்கள். அத்தோடு பதவிக்காக இல்லாமல் பணிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. எமது பங்குச்சபையின் மாதாந்தக் கூட்டமானது மாதத்தின் 3வது ஞாயிற்றுக் கிழமை நடத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதில் ஏதும் விசேட கூட்டம் தேவைப்படும் இடத்து செயலாளர் 2 நாட்களுக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிவித்தல் வேண்டும் என்றும் குறைந்தது ஆறு உறுப்பினர்களாவது கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 21-02-2009

இதன் பிற்பாடு உபசெயலாளர் ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய திரு. அமிர்தநாதர் பாக்கியநாதர் அவர்களை உபசெயலாளராக திரு. யூலியன் ஜெயரட்ணம் அவர்கள் முன்மொழிய, திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் வழிமொழிந்தார்.

சமூக நலப்பணிகளில் ஒன்றான 'கன்ரீன்' னை மேலும் விருத்தி செய்ய வேண்டும் என்றும், கோவில் துப்பரவு வேலை, திருத்த வேலை போன்றவற்றை பங்குச்சபை உறுப்பினர்கள் முன்னின்று செயற்படவேண்டும் என்றும், திருத்தவேலை சம்பந்தமான உதவிகளுக்கு திரு. றொபின் யேசுதாசனும், திரு. ஜஸ்ரீன் ஜீவானந்தம் அவர்களைத் தொடர்புகொண்டு செயற்படுத்தலாம் என்றும் பங்குத் தந்தை கூறினார். எமது பங்கிலிருக்கும் பல தரப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஆட்கள் உதவி இல்லாத காரணத்தால் கூடுதலான பணிகளை பங்குத் தந்தை செய்வதனால் அவரது பணியைச் சரிவரச் செய்வதற்கு மிகவும் கடினமானதாக இருப்பதாகவும், அவர் கூறினார். அதனால் இனி வரும் காலங்களில் பங்குச் சபையில் இருப்பவர்கள் அப்பணிகளை மேற்கொள்வதற்க்கு உதவினால் தன்னுடைய பணிகளை இலகுவாக மேற்கொள்ளலாம் என்றும் பங்குத் தந்தை கூறினார். அத்தோடு பங்கு சம்பந்மான எந்த விடயமாக இருந்தாலும் தயங்காது பங்குத் தந்தையுடன் கலந்துரையாடும்படியும் கூறினார். 'விதிமுறைப்பிரதிகள்' அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் கூறினார்.

மேலும், ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்கள் பொறுப்போடு சேர்ந்த அனைவரையும் விடாமுயற்சியோடு ஒன்றிணைத்து செயற்படவேண்டும். அத்தோடு இளைஞர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். காரணம் அவர்கள்தான் பிற்காலத்தில் எம் ஆலயத்தை வழிநடத்தக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்றும் பங்குத் தந்தை கூறினார்.

மேலும். அவர் கூறுகையில் எங்களுடைய ஆலயம் வாங்கி ஒரு வருடத்துக்குள் ஆலயத்தின் கடன்களையும் முடித்து ஏனைய இடத்தையும் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது. பொதுவாக, ஆலயத் துப்புரவு, மலசலகூடம், பங்குமனை என்பன திருத்தம் செய்ததில் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருந்தது. இதே ஒத்துழைப்பு தொடர்ச்சியாக இருந்தால் எங்களுடைய பங்கிற்கு புதிய பங்குத்தந்தை வரும்பொழுது எங்களுடைய பங்குச் சபையும் தங்களுடைய சேவையில் நன்றாக இருந்தால் எங்கள் ஆலயம் ஒருபோதும் ஆட்டம் காணாது என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

மேலும், அருட்சகோதரி கார்மேல் அவர்கள் எமது ஆலயப் பராமரிப்பினை மேற்கொண்டு வருவதனால் பராமரிப்பு சம்பந்தமான திருத்த வேலைகள் ஏதாவது இருப்பின் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் பங்குத்தந்தை கூறினார்.

அத்தோடு மலசலகூட பராமரிப்புக்கு மாதம் 200 டொலர்கள் கொடுத்து பராமரிப்பதாகவும், **City of Montreal, Basement** ஐப் பயன்படுத்துவதால், அங்குள்ள கதிரை, மேசைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தி அடுக்கிப் பராமரிக்க வேண்டும் என்றும், குளிர்காலத்தில் நாங்கள் எப்படி கோவிலைச் சுத்தம் செய்யவேண்டும் என்பது பற்றியும், விளக்கினார். அத்தோடு ஆலயமண்டபத்தை வாடகைக்கு எடுத்தவர்கள் துப்பரவு செய்யாமல் போகுமிடத்தில் அதைதுப்பரவு செய்வதற்காக அவர்களிடம் இருந்து அறவிடப்படும் பணமானது அதை துப்பரவுசெய்பவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று கலந்துரையாடப்பட்டது.

மேலும், தவக்காலலம் வருகின்றபடியால் எல்லோரின் விருப்பத்துக்கிணங்க ஞானஒடுக்கம் ஒன்று செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. தவக்கால உண்டியல்கள் வழங்கப்பட்டு அதில்சேகரிக்கப்படும் பணமானது, அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி நிதியத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது இறுதியாக எல்லோருடைய தனிப்பட்ட கருத்துக்களை கூறுமாறு கேட்கப்பட்டது. அதில் திரு. றொபின் அவர்கள் "தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டத்துக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து தனக்குப் பதிலாக வேறு எவரையாவது கூட்டத்துக்கு அனுப்பிவைக்க முடியுமா? என்று கேட்டதற்கு "அவ்வாறு வேறு ஒருவரை அனுப்ப முடியாது" என்று கூறப்பட்டது.

**Snow** அகற்றும் பொறுப்பினை **City** யிடம் கொடுப்பதா? எங்கள் பங்குமக்களில் யாராவது அதை செய்வதற்கு முன்வந்தால் அவர்களுக்கு உரிய ஊதியத்தைக் கொடுத்து அதைச் செய்யலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது. மேலும், **Snow** அகற்றும் பணியைச் செய்வதற்கு முக்கியாக ஒரு இயந்திரத்தை வாங்கி அதனைச் செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக திருவாளர் மோசஸ் சூசைமாணிக்கம் அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

| | |
|---|---|
| அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு. நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |